இணைப்பு IX

(601 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

மானியக் கோரிக்கை எண் 11–முத்திரைத்தாள் மற்றும் பத்திரப் பதிவு

அறிவிப்புகள், 2008–2009

1. புதிய சார்பதிவாளர் அலுவலகங்கள் திறத்தல்

சென்ற ஆட்சிக் காலத்தில் மூடப்பட்ட 40 சார்பதிவாளர் அலுவலகங்களைப் படிப்படியாக மீண்டும் திறக்க முடிவு செய்யப்பட்டு சென்ற ஆண்டில் 10 சார்பதிவாளர் அலுவலகங்கள் திறக்கப்பட்டன. நடப்பாண்டில் 5 சார்பதிவாளர் அலுவலகங்கள் திறக்கப்படும்.

2. பதிவுச் சட்டத்தில் திருத்தம்

தற்போதுள்ள பதிவு நடைமுறையின்படி பொது அதிகார ஆவணங்கள் சார்பதிவாளர் அலுவலக எல்லை வரம்பின்றி எந்த ஒரு சார்பதிவகத்திலும், இத்தகைய ஆவணங்கள் விருப்பப் பதிவின்கீழ் பதிவு செய்யப்படுவதால் நான்கு புத்தகத்தில் பதிவு செய்யப்படுகின்றன. இத்தகைய ஆவணப் பதிவின் விவரம் வில்லங்கச் சான்றில் இடம் பெற வகையில்லாததால் பதிவு பொதுமக்கள் சொத்தின் மீதுள்ள உரிமை குறித்த உண்மை நிலையை அறிய வழியில்லை. எனவே, இத்தகைய ஆவணங்களைக் கட்டாயமாகவும், சம்பந்தப்பட்ட சார்பதிவகத்திலும், ஒரு புத்தகத்திலும் பதிவு செய்ய பதிவுச் சட்டத்தில் உரிய திருத்தம் மேற்கொள்ளப்படும். இதனால் இத்தகைய ஆவணப் பதிவின்மூலம் நடைபெறும் முறைகேடுகள் அறவே தடை செய்ய ஏதுவாகும்.

3. காலியாக உள்ள முத்திரைத்தாள் விற்பனையாளர் பணியிடங்களைப் பூர்த்தி செய்தல்

பதிவுத் துறையில் தற்போது காலியாக உள்ள முத்திரைத்தாள் விற்பனையாளர் பணியிடங்களை மாநகராட்சி அல்லாத பகுதிகளில் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.